**திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டம் - 2018**

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3119 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) மற்றும் 3120 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் 4.04(அ) பிரிவின் IV ஆம் உறுப்புரையின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி கழகத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 5516 எல்கே மற்றும் 5517 எல்கே ஆம் இலக்க உடன்டிக்கையின் 2 ஆம் பட்டியல் 11 பீ.3 ஆம் பிரிவிலுள் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், வர்த்தக மற்றும் வாணிப, நீண்டகால இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாக 10 நிறுவனங்கள் காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியர் சந்தை கேள்வியை எதிர்கொள்வதற்கு வினைத்திறனான கல்வி முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புக்கள் போன்றவற்றிற்கான தரம், பொருத்தத் தன்மை, அணுகுதல் இனங்காணல் போன்வற்றை மேம்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் விளைவு அடிப்படையிலான கடனளிப்பு முறையின் மூலக்கூறின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன. நிகழ்ச்சித்திட்ட அமுல்படுத்தல் ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 125,916 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 961.2 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 28,708.23 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் மற்றும் ரூபா 13,100 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் முறையே ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தி கழகத்தினாலும் நிதியளிக்கப்பட வேண்டுமென இணங்கப்பட்டது. மீதியில் ரூபா 84,107.77 மில்லியன், ரூபா 68,093 மில்லியன் மற்றும் ரூபா 16,014.77 மில்லியன் தொகை முறையே இலங்கை அரசாங்கம் மற்றும் ஏனைய மூலங்களினால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2014 செப்தம்பரில் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் அளவில் பூர்த்தியாக்கப்படவேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, ஒன்றிணைந்த செலவினக் கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில்

நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

செயற்திட்டம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப்

பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| 01. | 2018 திசெம்பரில் 31 இல் முடிவடைந்த இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு, இலங்கை அச்சகத் திணைக்களம் ஆகிய அமுல்படுத்தல் முகவர்களின் நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் | - | ஒன்றிணைந்த செலவினக் கூற்றுக்களில் தொடர்புடைய அமுல்படுத்தல் முகவர்களின் கீழ் வழங்கப்பட்ட நிதித் தகவல் இணக்கஞ் செய்ய முடியாதிருந்தது | அவ்வாறான முகவர்களின் ஆளுகை சபைக்கான உறுப்பினர்களினை நியமிக்கப்படுவதில் தாமதங்கள் காரணமாக, பல அமுல்படுத்தல் முகவர்களின் நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதம நிதி உத்தியோகத்தரினால் ஒன்றிணைந்த செலவினக் கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவலின் துல்லியத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளினை எடுக்க வேண்டும். |

பந்தியின் பிரகாரம் 2019 மே 31 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

| இல. | | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் அலகுகள் / சதவீதம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பெற்ற பௌதீக செயலாற்றல் அலகுகள் / சதவீதம் | தாமதம் . கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | (i) | தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 90 பயிற்சி நிலையங்களின் புனரமைப்பு | 25 பயிற்சி நிலையங்கள் புனரமைக்கப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு எதிராக நிர்மாண வேலைகளில் மூலப் பொருட்கள் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. | தொழில்சார் பயிற்சி துறைக்கான கேள்விகளினை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் விளைவினால் நிர்மாண வேலைகளில் எதிர்பாராத தாமதங்கள் காரணமாக இது ஏற்பட்டது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளினை அடைந்து கொள்வதற்கு இயலக்கூடியவாறு நிர்மாண வேலைகளினைப் பூர்த்தி செய்வதற்கான ஒதுக்கீடுகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| | (ii) | தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 20 புதிய நிலையங்களின் நிர்மாணம் | 03 புதிய பயிற்சி நிலையங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கின்றதுடன் ஏனைய 05 புதிய நிலையங்களின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 02. | தனியார் துறையில் காணப்படும் 13 தொழில்சார் பயிற்சி வழங்குனர்களினூடாக செயற்திட்டத்தின் திறன்கள் துறை அபிவிருத்தி பிரிவினால் வேலைவாய்ப்பு இணைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றதுடன் முன்னுரிமை திறன்கள் பகுதிகள் மற்றும் தொழில் வேலை வாய்ப்புக்களில் பயிற்சி சந்தர்ப்பங்களினை அதிகரிப்பதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 40 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பதிவு செய்யப்பட்ட 1,760 பயிலுனர்களில் 21 சதவீதத்தினைப் பிரநிதித்துவப்படுத்துகின்ற 365 பயிலுனர்கள் பயிற்சிக் காலப்பகுதியின் போதுகைவிடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், பயிற்சி பாடநெறிகளினை அங்கீகரிப்பதில் தாமதங்கள், மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் சான்றுப்பத்திரங்களை விநியோகிக்கும் செயன்முறையின் விண்ணப்பங்கள் மற்றும் மதிப்பீடுகளில் காணப்பட்ட தாமதங்கள் காரணமாக பயிற்சிப் பாடநெறிகளினைப் பூர்த்தி செய்திருந்த ஏனைய 915 பயிலுனர்களுக்கு தேசிய தொழில்சார் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பயிற்சி வழங்குனர்களுடன் திறன்துறை அபிவிருத்தி பிரிவினால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பயிற்சி உடன்படிக்கைகளின் | வேலைவாய்ப்பு இணைப்பு பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் வெளியீடு திருப்தி கரமானதாக அடைந்து கொள்ளப்பட மாட்டாது. | 1. மாணவர்கள் அவர்களின் தொழில்சார் திட்டங்கள் தொடர்பில் அவர்களின் மனப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக கைவிட்டிருந்தனர்.<br>2. தற்போது காணப்படும் தாமதங்களினை முன்னேற்றுவதற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குவுடன் கலந்துரையாடல்கள் மேறகொள்ளப்பட்டிருக்கின்றன.<br>3. வேலைவாய்ப்புத் திறனின் 65% அடைந்து கொள்ளப் பட்டுள்ளது. | 1. நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி விளைவு பயிலுனர்களின் வேலைவாய்ப்புத் திறனாகக் காணப்படுகின்றது. ஆகையினால், தொடர்ச்சியான மதிப்பீடுகளுக்காக பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும், தொழில்சார் பயிற்சியாளர்களினால் வழங்கப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தினை முன்னேற்றுவதற்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும்.<br>2. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவில் அவதானிக்கப்பட்ட தேவையற்ற தாமதங்களினை தவிர்க்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.<br><br>இந்த நிகழ்ச்சித்திட்டம் வருடாந்தம் அமுல்படுத்தப் படுகின்றமையால், இந்த நிலைமையினை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் வேலைவாய்ப்புத் திறன் விகிதம் 65 சதவீதமாக இலக்கிடப்பட்டிருந்ததுடன் 2019 யூன் 04 இல் உள்ளபடியான உண்மை வேலைவாய்ப்புத் திறன் விகிதம் 03 சதவீதமாக தொடர்ந்தும் காணப்பட்டது. மேலும், பாடநெறிகளைப் பூர்த்தி செய்திருந்த 310 பயிலுனர்களுடன் தொடர்புடைய தகவல் திறன்கள் துறை அபிவிருத்தி பிரிவில் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | தவிர்ப்பதற்கு சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.<br>3. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் நிகழ்ச்சித் திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு மற்றும் தேசிய தொழில்சார் தகைமைச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்கு ஊக்கப்படுத்தப்படல் வேண்டும். |
| 03. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது இலங்கை ஓசன் பல்கலைக்கழகத்தினால் 07 டிப்ளோமா கற்கை நெறிகள் நடாத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் 232 மாணவர்களினை அனுமதிப்பதற்கு திட்டமிடப்பட்டது. இருப்பினும், ரூபா 1,449,000 கிரயத்தில் பல்கலைக்கழகத்தினால் பிரசுரிக்கப்பட்ட செய்தித்தாள் விளம்பரம் பிழையான தகவலினைக் கொண்டிருந்தமை காரணமாக தொடர்புடைய கற்கை நெறிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. | திட்டமிட்ட நோக்கங்களினை அடைந்து கொள்ள முடியாது போகும். | பதிலளித்திருக்கவில்லை | தொடர்புடைய தரப்பினர்களிடம் புலனாய்வுகளினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| 01. | தம்புள்ள மற்றும் இரத்மலானை தொழில்நுட்ப கல்லூரிகளினால் நடாத்தப்படுகின்ற மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர்களின் திருத்துகை டிப்ளோமா பாடநெறிக்காக ரூபா 2,576,404 கிரயத்தில் பயிற்சி உபகரணங்களினை கொள்வதற்கு செய்வதற்கு 2017 இல் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 ஏப்ரல் 30 வரையிலும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | பயிற்சி உபகரணங்கள் காணப்படாமை, பயிற்சியின் தரத்தினை பாதகமாக தாக்கமளிக்க கூடும். | செயலாற்றல் பிணை சமர்ப்பிக்கப்பட்டமை காரணமாக 2017 யூலை 09 இல் கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் பயிற்சியின் எதிர்பார்க்கப்பட்ட தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு உபகரணங்களினைக் கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| 02. | பெறுகை வழிகாட்டல் - 2006 இன் 4.4.2 ஆம் பெறுகை வழிகாட்டல் மற்றும் 2.14.1 ஆம் பெறுகை வழிகாட்டல்களுக்கான 2017 மார்ச் 15 ஆந் திகதிய 33 ஆம் இலக்க குறைநிரப்பிக்கு முரணாக, திணைக்கள பெறுகை குழுவினால் தேசிய போட்டி விலைமனு முறைமையினைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக பிராந்திய பெறுகைக் குழுவால் உடன்கொள்வனவு பெறுகை முறைமையைப் பயன்படுத்தி கட்டுநாயக்கவிலுள்ள பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்காக ரூபா 46,558,506 பெறுமதியுடைய பயிற்சி உபகரணங்களினை தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை கொள்வனவு செய்திருந்தது. | போட்டித் தன்மையான கேள்வி மனு செயன் முறைகளின் பற்றாக்குறை காணப்பட்டமை | பதிலளித்திருக்க வில்லை. | கேள்விமனு செயன்முறையின் போட்டித் தன்மையை உறுதிப்படுத்த கூடியவாறு அரச பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 03. | 2018 ஆம் அண்டின் போது 02 அமுல்படுத்தல் முகவர்களினால் நிர்மாண செயற்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டவற்றின் கீழ்க் காணப்படும் மிகுதி வேலையை பூர்த்தி செய்வதற்கு 2019 யூன் 18 வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிர்மாணங்கள் மீது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 101.08 மில்லியன் தொகையான கிரயம் ஏற்பட்டிருந்தது.<br>1. பெட்டிகலவத்தியிலுள்ள தொழில்சார் பயிற்சி நிலையத்தின் தொடர்ச்சியான வேலை<br>2. ரத்தோட்டையிலுள்ள தொழில்சார் பயிற்சி நிலையத்தின் தொடர்ச்சியான வேலை<br>3. லெவ் லேனிலுள்ள (கட்டம் 2) பயிற்சிக் கட்டிடத்தின் புனர்நிர்மாணம், மாற்றியமைத்தல்கள் மற்றும் செம்மையாக்கல்கள்<br>4. தம்புள்ளயிலுள்ள பயிற்சி நிலையத்தின் முன்மொழியப்பட்ட புதுப்பிக்கும் வேலை | ஒப்பந்தங்களின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம் காணப் படுகின்றமை | - | மீதியாகவுள்ள வேலைகளினை பூர்த்தியாக்குவதற்காக ஒப்பந்தங்களினை அளிப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் திடமான மதிப்பீடொன்றின் பின்னர் தகுதியான ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும் |

## 3.3 களை விஜயங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரியில் உணவு தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி மாணவர்களின் பயன்பாட்டிற்காக 2015 | கடந்த 03 ஆண்டுகளாக செலவினத்திலிருந்து எவ்வித பயன்களும் கிடைக்கப் | ஆய்வுகூட நிர்மாண செயற்பாடுகளில் தாமதங்கள் காரணமாக பிரதானமாக இந்த | அவ்வாறான உபகரணங்களினைப் மாணவர்கள் பயன்படுத்தக்கூடியவாறு ஆய்வு கூடத்தின் நிர்மாண |

| | | | |
|---|---|---|---|
| இல் ரூபா 6.93 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள், ஆய்வுகூட கட்டிடத்தில் காணப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை காரணமாக தொடர்ந்தும் விளைவொன்றாகக் காணப்படுகின்றது. | பெற்றிருக்காததுடன் மாணவர்கள் அந்தத் துறையில் அறிவினைப் பெற்றுக் கொள்ளாது பாடநெறிகளினைப் பின்பற்றுகின்றனர். பெறுகையின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் பயிலுனர்களுக்கு கிடைக்கப்பெற மாட்டாது. | நிலைமை உருகியிருந்தது. | வேலைகளினை பூர்த்தியாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டத்தின் நோக்கங்களுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட செலுத்துகைகள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்ட நிதிகளில் பட்டங்கல பல்கலைக்கழக கல்லூரியால் மீளாய்வாண்டின் போது ரூபா 886,801 தொகையான ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகளுக்கான மிகைக்கட்டண செலுத்துகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களினை அடைந்து கொள்வதற்கு செலவினம் தொடர்புடையதாகக் காணப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | திடமான குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக மாத்திரம் செயற்திட்டத்தின் நிதிகளினைப் பயன்படுத்துவதற்கு அமுல்படுத்தல் முகவர்கள் அறிவுறுத்தப்படல் வேண்டும். |

## 3.5 விளைவற்ற / குறைப்பயன்பாட்டுடைய வளங்கல்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| அஹன்கமயில் காணப்படும் ஹோட்டல் பாடசாலையினை புனர்நிர்மாணம் செய்வதற்கு மற்றும் அதனை சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய 04 டிப்ளோமா பாடநெறிகளுடன் | செலுத்துதல்களின் தவறான பயன்படுத்துகை / வழக்கற்றுப் போதலுக்கான சாத்தியங்கள் காணப்படுகின்றமை. | பொது தனியார் கூட்டாண்மையின் கீழ் மாதிரி ஹோட்டலாக நடாத்துவதற்கு பல தடவைகளில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்திருந்தது. | 1. தீர்மானங்களில் மாற்றங்களினை மேற்கொள்வதற்கு முன்னர் சாத்தியவள கற்கைகள் நடாத்தப்படல் வேண்டும்.<br>2. பயிலுனர்களுக்கான |

| | | |
|---|---|---|
| தொடர்புடைய செயன்முறைப் பயிற்சியை வழங்கும் நோக்கத்துடன் சுற்றுலா ஹோட்டலொன்றாக மாற்றுவதற்கு 2018 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 121.81 மில்லியன் தொகையொன்றை இலங்கை தொழிற்சார் பயிற்சி அதிகாரசபை செலவழித்திருந்தது. 2018 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், சுற்றுலா ஹோட்டலின் செயற்பாடுகள் 2019 மே 31 வரையிலும் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. 2017 இல் ரூபா 19.67 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட பயிற்சி உபகரணங்கள் மற்றும் ரூபா 9.40 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழக்கற்றுப் போக அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும், அவ்வாறான 04 டிப்ளோமாக்களின் கீழ் மாணவர்களின் உள்ளீர்ப்பு, சுற்றுலா ஹோட்டலொன்றாக மாற்றுதல் மற்றும் அதனைத்தொடர்ந்து நிர்மாண வேலைகளில் மாற்றம் போன்ற தீர்மானம் காரணமாக, 03 வருடங்களுக்கும் அதிகமாக | பதவியணியினரின் ஆட்சேர்ப்புக்கள் செயல்முறையில் காணப்படுகின்றது. | எதிர்பார்க்கப்பட்ட செயன்முறைப் பயிற்சிகளினை வழங்குவதற்காக ஹோட்டலின் தொழிற்பாடுகளினை ஆரம்பிப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| இல. | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 01. | தங்கல்லயில் தொழில்நுட்ப கல்லூரியினால் நடாத்தப்படும் 03 பயிற்சி பாடநெறிகளுக்கான ISO 9001 -2015 சான்றுப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்குமீளாய்வாண்டின் போது ரூபா 479,924 தொகையொன்றை இலங்கை ஓசன் பல்கலைக்கழகம் செலவழித்திருந்தது. எவ்வாறாயினும், தொர்புடைய கற்கை நெறிகள் கல்லூரியினால் நடாத்தப்பட்டிருக்கவோ அல்லது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருக்கவோ இல்லை. | பயனற்ற செலவினம். | பதிலளித்திருக்க வில்லை. | கல்லூரியில் தொடர்புடைய கற்கை நெறிகளினை ஆரம்பிப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| 02. | வரிசை அமைச்சின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது வரிசை அமைச்சு காணப்படும் 08 மாடிக் கட்டிடத்தின் மேல் தளத்தைை புனரமைப்பதற்கு 2018 திசெம்பர் 31 வரை ரூபா 11.06 மில்லியன் தொகையொன்றை மூன்றாம் நிலை தொழில்சார் கல்வி ஆணைக்குழு செலவழித்திருந்தது. எவ்வாறாயினும், மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தின் தகவலின் பிரகாரம், தொடர்புடைய அமைவிடம் அலுவலக நோக்கமொன்றிற்கு பொருத்தமற்றதாகக் காணப்பட்டதுடன் தற்போது அது குறித்த நோக்கத்திற்காக ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படவில்லை. | வீணான செலவினம் | முன் அனுமதி பெறப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட ஒரு வருட குடியிருப்பு காலப்பகுதியின் பின்னர், தரைப் பகுதிக்கு சேதங்கள் ஏற்பட்டமை காரணமாக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திடமிருந்து அறிக்கையொன்றை மூன்றாம் நிலை மற்றும் தொழிற்சார் கல்வி ஆணைக்குழு கோரியிருந்தது. | புனரமைப்பு வேலைகளுக்காக பொறுப்புடைய உத்தியோகத்தர்களினை புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் புனரமைப்பு வேலைகளில் காணப்படும் குறைபாடுகளினை திருத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |